DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C. No.1429/2025

PROSECUTION WITNESS L.W.7/P.W.5

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சங்கர் | தகப்பனார் பெயர் | விஸ்வநாதன் |
| கிராமம் | காமாட்சிகாடு | ஊர் | ஈரோடு |
| தொழில் | | வயது | |

**எதிரி காணொளி காட்சி மூலமாக ஆஜர்படுத்தப்பட்டார்.**

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 24.03.2026

**முதல் விசாரணை**

1) நான் தற்போது ஈரோடு காமாட்சிகாட்டில் குடியிருந்து வருகிறேன். ஹோட்டலில் வேலை பார்த்து வருகிறேன்.

2) எதிரி இருசன் என்பவரை எனக்கு தெரியும். (காணொளி காட்சி மூலமாக ஆஜராகியுள்ள எதிரியை சாட்சி அடையாளம் காட்டினார்.) கடந்த 22.07.2025 ம் தேதி, நானும் எனது நண்பர் கௌதமும் சூரம்பட்டி காவல்நிலையம் வழியாக டீ குடிக்க சென்று கொண்டிருந்தபோது, சூரம்பட்டி காவல் நிலைய உதவி ஆய்வாளர் எங்களை அழைத்து இருசன் என்பவரை விசாரிக்க வேண்டியிருப்பதாகவும், அதற்கு எங்களை சாட்சியாக இருக்கும்படியும் கேட்டுக் கொண்டார். இருசன் கொடுத்த வாக்குமூலத்தையும் எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார். என்னிடம் காண்பிக்கப்படும் எதிரி இருசனின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். **(இருசனின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவது கையெழுத்து அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** என்னுடன் கௌதம் என்பவரும் கையொப்பம் செய்தார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் சொன்னது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம்

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.03.24 17:58:10 +0530

செய்துவிட்டு, எதிரிக்கு எதிராக மாற்றி பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken Down Before Me and Typed By the Typist in Open Court Read Over/ Interpreted to the witness/deponent and Admitted by the witness/deponent to be correct.

VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.03.24 17:58:17 +0530

Judicial Magistrate No.I,
Erode.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C. No. 1429/2025

PROSECUTION WITNESS L.W.10/ P.W.6

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பழனிவேல் | தகப்பனார் பெயர் | பூங்காகவுண்டர் |
| கிராமம் | | ஊர் | ஈரோடு |
| தொழில் | உதவி ஆய்வாளர் | வயது | |

**எதிரி காணொளி காட்சி மூலமாக ஆஜர்படுத்தப்பட்டார்.**

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 24.03.2026

**முதல் விசாரணை**

1) நான் தற்போது ஈரோடு தாலுக்கா காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்

2) கடந்த 06.04.2025ம் தேதி, 16.00 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் அருணகிரி பதிவு செய்து எனது பார்வைக்கு வைத்த குற்ற எண்.103/2025 சட்டபிரிவு 331(4), 305(a) BNS வழக்கு கோப்பை பெற்றுக் கொண்டு அன்றைய தினமே 17.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகள் அம்மு, கீதா ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**

3) வழக்கு சாட்சிகள் சுப்பிரமணி, கண்ணன், தினகரன், அம்மு, கீதா, கௌதம், சங்கர் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகளின் விசாரணையிலிருந்து சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் எதிரியை தேடிய போது எதிரியை தெற்கு காவல்நிலைய உதவி ஆய்வாளர் 22.07.2025 ம் தேதி, கைது செய்து எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்றபோது, இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட களவுச் சொத்தான ரூ.6000/- ஐ திருடிக் கொண்டு வள்ளலார் கோவில் பக்கம் போய் செலவு செய்ததாக கூறியுள்ளார். மேற்படி கடலூர் மத்திய சிறையில் இருந்த எதிரியை 29.07.2025 ம் தேதி, காலை 9.15 மணிக்கு சம்பிரதாய கைது செய்தேன். இத்துடன் எனது புலன் விசாரணை முடித்து எதிரி மீது சட்டபிரிவு 331(4), 305(a) BNS ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.03.24 17:58:25 +0530

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) இவ்வழக்கில் சுமார் 9 மணி நேரம் காலதாமதமாகத்தான் புகார் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் முந்தைய நாள் இரவு நடந்த சம்பவத்திற்கு அடுத்த நாள் காலை உடனடியாக புகார் கொடுக்கப்பட்டது. இவ்வழக்கில் சிசிடிவி கேமரா பதிவு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். அ.சா.1 க்கு தெரிந்த நபர்கள் மற்றும் கடையில் வேலை செய்தவர்களை தவிர வேறு தனிபட்ட சாட்சிகளை நான் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. மாதிரி வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள கடைகளான நிர்வேத் டாய்ஸ் மற்றும் பெட்டகம் கடைகளில் உள்ள நபர்களை நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் சொன்னது போல் எந்த சம்பமும் நடைபெறவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம், ஒப்புதல் வாக்குமூலம் ஆகியவற்றை தயார் செய்து எதிரி மீது பொய்யாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது பொய்யாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

Taken Down Before Me and Typed By the Typist in Open Court Read Over/ Interpreted to the witness/deponent and Admitted by the witness/deponent to be correct.

VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.03.24 17:58:37 +0530

Judicial Magistrate No.I,
Erode.

.